பாலவிளை குடிநீர் திட்டம்.

91—*வினா எண் 16870—திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் விளவங்கோடு ஊராட்சியில் உள்ள பாலவிளை குடிநீர்த் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்,

(ஆ) மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் பாலவிளை கிராமத்திற்கு ஏழு பொதுக் குழாய்கள் வழியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. தற்பொழுது குடிநீர் பற்றாக்குறை பிரச்சனை இல்லை.

திரு. டி. மணி: மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த பாலவிளை குடிநீர்த் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். 1982-ல் கேட்கப்பட்ட கேள்வி இது. இடையிலே இத்திட்டம் செயலுக்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போது அமைச்சரவர்கள் தந்திருக்கிற தகவல் சரியான தகவல் அல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்னாலிருந்தே இத்திட்டம் செயல்படவில்லை. மோட்டார் ஸ்டாட்டர் என்று செல்லப்படுகின்ற கருவியில் பழுது ஏற்பட்டிருப்பதால், இப்படிப்பட்ட சில காரியங்களினால், தண்ணீர் விநியோகம் முடக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி அதிகாரிகளோடு தொடர்பு கொண்டும் இதுவரையில் அது சீர்செய்யப்படவில்லை. அதை விரைவாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்கிறேன்.

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கான வருங்கால வைப்புத் திட்டம்.

92—*வினா எண் 17033—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டங்களில் வருங்கால வைப்பு நிதி (Provident fund) திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அது யாரால் பராமரிக்கப்படுகிறது?

(இ) 1982 டிசம்பர் வரை பயன்பெற்றத் தொழிலாளர்கள், பயன்பெறாத தொழிலாளர்கள், எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; (அ) ஆம்.

(ஆ) கணக்கு அலுவலர் (நிதி) தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்புநிதி கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை—9, என்பவரால் கருவூலக் கணக்குத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் பராமரிக்கப் படுகிறது.

(இ) 1982 டிசம்பர் வரை பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 12,648; பயன் பெறாதவர்களின் எண்ணிக்கை இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு இரப்பர் தோட்டங்களில், குறிப்பாக கீரிப்பாறை, மணலோடை போன்ற இடங்களிலும் அங்கே இருக்கிற ஃபாக்டரிகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு இன்னும் பிராவிடன்ட் ஃபண்டு நிதி அமுலாக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்களா? அவர்களுக்கு உடனடியாக இத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதியைப் பொறுத்தமட்டில் மேற்குறிப்பிட்ட இரப்பர் தோட்டங்களில் பணியாளர் பயன்பெறும் வைப்பு நிதித் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். எப்படி இருந்தாலும் இதைப் பொறுத்தவரை, தமிழக அரசு ஆணையர் மற்றும் செயலாளர், வன—மீனளத்துறை அவர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று (ரிட் பெட்டிஷன்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இதுபற்றி பின்னால் விரிவாகப் பேசலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் பி.எப். தொகைக்கான கணக்கு சரியாக வைக்கப்படவில்லை என்பதன் காரணமாக வசூலிக்கப் பட்ட பணம் முழுவதும் தரப்படவில்லை. ஆக அந்தத் தொழிலாளர்களின் பி.எப். கணக்கு ஒழுங்காக வைக்கப் படாததன் காரணத்தினாலே இந்தத் தொழிலாளர்கள் வேலையை விட்டுப் போகும்போது அவர்களுக்கு கிடைக்கக் கூடிய பி.எப். கிடைக்காமல் இருக்கிறது. கணக்கை சரியாகப் பார்த்து வாங்கமுடியாத பிரச்சினை இருக்கிறது. ஆக அவர்களுக்கு எவ்வளவு பி.எப். பணம் பிடிக்கப்படுகிறது, எவ்வளவு வட்டி போடப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டக்கூடிய அளவிற்கு பாஸ் புக் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

1984 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சட்டப் பிரகாரம், என்ன அறிவிப்புகள் அவர்களுக்குத் தர வேண்டுமோ, அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதற்கான மத்திய அரசின் நிதி உதவி.

93—(*வினா எண் 17863)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதற்காக மத்திய அரசு மாநில அரசிற்கு உதவித் தொகை அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணம் முழுமையும் செலவு செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்காக பணம் ஒதுக்கியதாகத் தெரிகிறது. எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும், ஆழ்குழாய்க் கிணறுகளுக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மத்திய அரசு, அந்தக் கிராமக் குடிநீர்த் திட்டம் வறட்சி நிவாரணப்பணி பிரச்னைகள், குடிதண்ணீர் வசதி அளிக்க, துளைக் கிணறுகள் போடுவதற்கு, அரசு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ், 1982—83-ல் ரூ. 12.22 கோடி, 1983—84-ல் ரூ. 7.94 கோடி ஆக ரூ. 20.16 கோடி வழங்கி யிருக்கிறது.

துரிதப்படுத்தப்பட்ட ஆக்சலரேடட் ஸ்கீம்—அந்தத் திட்டத்தின் கீழ் 1982—83-ல் ரூ. 8.56 கோடியும், 1983—84-ல் 6.94 கோடியும், ஆக ரூ. 15.50 கோடி கொடுத்திருக்கிறது. இத்துடன் 348 திட்டங்கள் ஊக்குவிக்கும் திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படும். அதற்காக ரூ. 4 கோடி கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பணம் ஆழ் துளைக் கிணறு களுக்காக சென்னை நகரத்திற்காக எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது? சென்னை நகரில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளனவா, எத்தனை கிணறுகள்? எந்தெந்தப் பகுதிகளில் தோண்டப்பட்டுள்ளது, இவைகளில் எவ்வளவு உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதனை அறிவிக்க இயலுமா?

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS